


தென்காசி தெற்கு மாவட்டம் மேலகரம் பேரூர் செயலாளர் ஈ. சுடலை அவர்கள் கடந்த 09.05.2026 அன்று இயற்கை எய்தினார். ஈ.சுடலை அவர்களின் திருவுருவப் படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது. இந்நிகழ்வில் மேலகரம் பேரூராட்சி பணியாளர்கள் 100 பேருக்கு அரிசி, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, அழகு சுந்தரம்,ஜெயா ஐயப்பன், நகர செயலாளர் சாதிர் உள்பட மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## நாளை நடைபெறுகிறது!

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!



சேலம், மே 15 -

சேலம் கிழக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (16. 05.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

1. முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள்,

2. 14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம் சம்மந்தமாக,

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சேலம் மேற்கு மாவட்ட

# தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம், மே 15 -

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (15.05.2026 - வெள்ளிக்கிழமை ) காலை 10.00 மணியளவில், எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள, ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,

கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை , இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி,

அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர்

# ஆனூர் ஜெகதீசனின் துணைவியார் திருமதி. ஜெ.ஆதிலட்சுமி அம்மையார் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே.15 -

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் அவர்களின் துணைவியார் திருமதி. ஜெ. ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்களுடைய துணைவியார் திருமதி. ஜெ.ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஐயா ஆனூரார் அவர்களின் பொதுவாழ்க்கைக்குப் பெருந்துணையாக இருந்த அம்மையார் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் திரு. ஆனூர் ஜெகதீசன் ஐயா அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மொழிப்போர் தியாகி

# எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவி திருமதி.எஸ்.ரூபாவதி அம்மாள் மறைவு!



சென்னை, மே 15 -

மும்மொழிப் போராட்ட வீரரும், மொழிப்போர் தியாகியுமான நினைவில் வாழும் எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவியும், பாளையம் (நில உரிமையாளர்) அவர்களின் இளைய மகளுமான திருமதி.எஸ்.ரூபாவதி அம்மாள் (வயது 86) நேற்று முன்தினம் பிற்பகல் 1.55 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத்தினர் மறைந்த திருமதி.ரூபாவதி அம்மாள் உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (14.05.2026 - வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து (நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, 9/6 கிராமத்தில்) புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெற்றன.



”ஜப்பான் நாட்டு தூதரக அதிகாரிகள் திருமதி. சுபாகிமோட்டோ மயுமி, திருமதி. ஆஷா ஆகியோர் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வனைச் சந்தித்து நடந்து முடிந்த தமிழ்நாட்டு சட்டப்பேரவை தேர்தல் குறித்தும், புதிய அரசின் தொழில் வளர்ச்சி குறித்தும் ஆலோசனை நடத்தினர். இந்த ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அதிகாரி நம் கழக தலைவர் அவர்கள் மீது பெரும் மரியாதை வைத்து அவரின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டி கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. ”கருப்பு சிவப்பு பேட்ஜ் தன் கைப்பையில் வைத்து பாதுகாத்து வருவதை காட்டி கண்டிப்பாக ” Stalin Will Come Back Stronger என்று தன் நம்பிக்கையை வெளிபடுத்தினார்.

## ஜெட் எரிபொருள் விலை அதிகரிப்பால் சர்வதேச விமான சேவைகள் குறைப்பு!

# ஏர் இந்தியா அதிகாரப் பூர்வ அறிவிப்பு!

புதுடெல்லி, மே 15 -


அதிக ஜெட் எரிபொருள் விலை மற்றும் வான் வழி கட்டுப்பாடுகள் காரணமாக, ஏர் இந்தியா நிறுவனம் சில வெளிநாட்டு நகரங்களுக்கான சேவைகளையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க உள்ளது.

உலக சந்தையில் ஜெட் எரிபொருளின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இது விமான நிறுவனங்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது.

பாகிஸ்தான் வான் வெளி இந்திய விமானங்களுக்கு 2025 முதல் மூடப்பட்டிருப்பதால், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா செல்லும் விமானங்கள் நீண்ட தூரம், மாற்று பாதைகளில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக வட அமெரிக்கா செல்லும் விமானங்கள் வியன்னா அல்லது ஸ்டாக்ஹோம் போன்ற நகரங்களில் தொழில்நுட்ப நிறுத்தம் செய்ய வேண்டியுள்ளது. இது லாபத்தைக் கடுமையாக பாதிக்கிறது. இந்த பிரச்சினையால் விமான சேவைகள்குறைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில்,ஏர் இந்தியா நிறுவனம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்லி - சிகாகோ, மும்பை - நியூயார்க், டெல்லி - ஷாங்காய், சென்னை - சிங்கப்பூர், மும்பை - டாக்கா, டெல்லி - மாலே இடையேயான விமான சேவைகள் ஜுன் மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. எனினும் மாதந்தோறும் பல்வேறு நாடுகளுக்கான 1200 சர்வதேச விமான சேவைகள் தொடர்ந்து இயக்கப்படும் என தெரிவித்துள்ளது.

# வாழ்க புது சோபா




**பொ**துவாக
சோபா மீது உட்காரலாம்!
விளையாடலாம்!
முதுகு சாய்த்து ஓய்வெடுக்கலாம்!
படுக்கையாக்கிப் படுக்கலாம்!

மாற்றம் வேண்டுமென்று
எக்ஸ்சேஞ்ச் ஆஃபரில்
சோபா கொடுத்து
அரியணையும் வாங்கலாம்!

சோபாவுக்குள் பஞ்சும் இருக்கலாம்!
தேங்காய் நாரும் இருக்கலாம்
ஃபோம் இருக்கலாம்
லட்சுமி தாண்டவமாடும் தாளும் இருக்கலாம்
கோலார் தங்க வயலின் சாயலும் இருக்கலாம்!
கொடுக்கல் வாங்கலின்
ஆழம் அகலம் நீளம் பொறுத்தது அது!

நம் வீட்டுக்கு
விருந்தினர் வரும்போது
நம் சோபாவில்தான் உட்கார வைப்போம்

ஆனால்
விருந்தினராகச் செல்லும் வீட்டுக்கும்
தானே சோபாவைத்
தூக்கிக் கொண்டு போவது என்பது
லாட்டரியில் கிடைக்கும் ஜாக்பாட்
பம்பர் பரிசு வகையானது!

நல்ல வேளை
எந்த
சோபாவுக்கும்
வாய் இல்லை!

உள்ளே திணித்திருப்பதை
சோபாவால் சொல்ல முடியாது!

வாழ்க புது சோபா!



(இது சோபா பற்றிய கவிதை மட்டுமே )

**ஆண்டாள் பிரியதர்ஷினி**

## ஏங்கித்தவிக்கும் தமிழ்நாட்டு மக்கள்!

# ரீலாக இல்லாமல் ரியலாக தாங்கிப்பிடிக்குமா தமிழக அரசு?

**பி.ஜாகீர் உசேன்**
திருவாரூர்

**த**மிழ்நாட்டில் முந்தைய தி.மு.க. அரசு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனை திட்டங்களால் மிகப்பெரிய பலனை பெற்று, தங்களின் வாழ்க்கைத்தரத்தை முற்றிலும் மாற்றி, சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வியில் வளர்ச்சி பெற்றுவந்த நிலையில் , மூட நம்பிக்கையின் உதவியோடும், சமூக வலைதளங்களின் தவறான செய்திகளை சினிமா பாணியில் பரவவிட்டு, மக்களை திசை திருப்பி, போலியான மாயையை கட்டமைத்து, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியால் பலன்பெற்ற மக்களின் நன்றிக்கடனாய் வாக்குகளைப் பெற்றவர்களின் தயவால் ஆட்சிக்கு வந்திருக்கும் தற்போதய சிறுபான்மை அரசின் முதல் கோணல், முற்றிலும் கோணலாகுமோ என்கிற அச்சத்தில் தமிழ்நாட்டு மக்கள் உறைந்து போய் உள்ளனர்.

தமிழ்நாட்டு மக்களில் இதுவரை சுமார் 1 கோடியே 31 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் தங்களுக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத்தொகையில் தங்களின் அன்றாட குடும்பச் செலவையோ, அவசர மருத்துவச் செலவையோ எதிர்கொண்டு நிம்மதியாக வாழ்ந்த னர்.

ஏறத்தாழ 897.82 கோடி பெண்கள் தங்களின் அத்தியாவசிய பயணத்திற்கு கட்டணமில்லாமல் விடியல் பயணம் மேற்கொண்டு அதில் மிஞ்சிய கட்டணத்தொகையில் இதர குடும்ப செலவுகளை சமாளித்தனர், ,

புதுமைப்பெண் திட்டத்தால் நம்பிக்கையோடு தனது மகள் சமுதாயத்தில் பட்டதாரியாக வலம் வர கல்லூரி படிப்பை சுமார் 2,02,824 மாணவிகள் தொடர்ந்தனர், தனது மகனும் பட்டதாரியாகி வேலைவாய்ப்பைப் பெற தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 3.28 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர்.

காலை நேர சமையல்கட்டு பணிகளில் இருந்து பெண்கள் கொஞ்சம் ஓய்வெடுக்க பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவு திட்டங்களில் 20.73 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் பெரிதும் பயன் பெற்றனர்.

ஏற்கனவே நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வீட்டில் முடங்கிக் கிடந்தவர்கள் மக்களைத் தேடி மருத்துவத்தால் 2.50 கோடி பேர் வீடு தேடி வந்த மருத்துவ உதவிகளாலும், மருந்து மாத்திரைகளாலும் நிம்மதியோடு வாழ்ந்தனர்.

அரசின் உதவிகளைப்பெற அரசு அலுவலகங்களுக்குச் சென்று அலையும் நிலை மாறி , அரசு எந்திரமே தங்கள் பகுதிக்கு வந்து குறைகளை தீர்த்த அதிசயத்தை உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சுமார் 28.87 மனுக்களுக்கு தீர்வு தந்தது.

வயது முதிர்ந்தவர்களுக்கு ரேஷன் பொருட்கள் 27.55 குடும்பங்களுக்கு வீடு தேடிவந்து தாயுமானவர் திட்டம் அரசாலேயே கொடுக்கப்பட்டது.

இப்படி தொடர்ந்து தமிழ்நாட்டை , நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்து ஆண்டுகால மக்களின் வாழ்க்கைத்தரம் தற்போது மிகப்பெரிய கேள்விக்குறியோடு தொங்கிக்கொண்டிருக்கிறது .

மகளிர் உரிமைத்தொகையால் நிம்மதி பெருமூச்சுவிட்ட பெண்களின் நிம்மதி மூச்சு தற்போது திணற தொடங்கி இருக்கிறது, விடியல் பயணம் இல்லாமல் போய்விடுமோ என ஏக்கம் வந்திருக்கிறது, மகனின் மகளின் கல்லூரிக்கனவு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் எதிர்பார்ப்பால் இருண்டு போய்விடுமோ என்கிற ஏக்கம் ஏழை பெற்றோர்களின் எண்ணங்களில் உதிக்க தொடங்கிவிட்டது. வயது முதிர்ந்தவரும், நோய் வாய்பட்டோரும் இந்த மாதம் ரேஷன் பொருட்கள் வருமோ வராதோ? என்றும் மருத்துவ உதவிகள் வருமா வராதோ ? என்றும் ஏக்கப் பெருமூச்சு விட தொடங்கிவிட்டனர். அரசின் உதவிகளை பெற இனி அரசு அலுவலகங்களுக்கு எத்தனை முறை அலைய விட போகிறார்களோ? என்கிற பெரிய கவலை மக்களின் முகத்தில் பரவ தொடங்கிவிட்டது.

இதையெல்லாம் புதிதாக பதவி ஏற்ற அரசு புரிந்துகொள்ள வேண்டும். , எதிர்க்கட்சி தலைவர் சட்டமன்றத்தில் வைத்த குற்றச் சாட்டுக்களுக்கு பதில் இல்லாமல் அமைதியாக இருந்த தற்போதைய தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று நாட்டின் ஒவ்வொரு குடும்பதின் நிலையறிந்த மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ரீல்ஸ் ஆட்சி நடத்தாமல் ரியல் ஆட்சி நடத்த வேண்டும்.

மாறாக தங்கள் வசம் உள்ள சமூக வலைதள கோஷ்டிகள் மூலம் “அது வேண்டாம்”.. “இது வேண்டாம்”.. என ரீல்ஸ் மூலம் போலியான நாடகங்களை பரப்பி, திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களை, பழிவாங்கும் எண்ணம் மட்டுமே கொண்ட தனது சகாக்கள் கொடுக்கும் மக்கள் விரோத யோசனைகளால் முடக்க நினைத்தால், அதற்கு முதலமைச்சர் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை பெரும்பாலான மக்களின் மன நிலை உணர்த்துகிறது.

எனவே நீங்கள் எப்படி வேண்டுமானாலும் ஆட்சியை தொடர, உங்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிப்போருக்கு எதை வேண்டுமானாலும் கொடுங்கள், எதைவேண்டுமானாலும் செய்யுங்கள், ஆனால், ஏற்கனவே சென்ற தி.மு.க. ஆட்சியில் பெற்றுவந்த மக்கள் நலத்திட்டங்களை எதையும் நிறுத்தி விடாதீர்கள். கோட்டைக்கே செல்லாமல் கோப்புக்களையே பார்க்காமல் நிதி பற்றிய அனுமான அறிக்கை கொடுத்ததைப்போல் இல்லாமல் ,ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு பல்வேறு நிதி உதவியை நிறுத்தினாலும் , தனது நிர்வாக திறமைகளால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தாங்கள் தர முடியாவிட்டாலும் ஏற்கனவே தரப்பட்ட திட்டங்களை நிறுத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதே தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய கோரிக்கையாக உள்ளது.